### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுக்களஞ்சிய பதிவேடுகள் தொடர்பான பட்டோலைகளின் முழு மொத்தம் ரூபா 1,598,324 ஆக இருந்ததுடன் இதனுள் ரூபா 1,113,550 மொத்த பெறுமதியான டயர் இருப்பும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்த முழு மொத்தத் தொகையையும் கணக்குகளில் காட்டும் போது முறையான வகைப்படுத்தலின்றி முழுப் பெறுமதியும் எழுதுகருவி இருப்பாகக் காட்டப்பட்டிருந்தது. | இனிவரும் நிதிக் கூற்றுக்களில் வகைப்படுத்தலின் கீழ் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | இருப்புக்களை வகைப்படுத்தல் சரியாகக் காட்டப்படுதல் வேண்டும். |

### 1.6.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 140,465,142 ஆகவும் துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 140,764,061 ஆகவும் இருந்ததனால் ரூபா 298,919 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பரீட்சை மீதிக்கும் பொதுப் பேரேட்டின் மீதிகளுக்குமிடையே வித்தியாசம் காணப்பட்டது என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். அதற்கு காரணமானது நாட்குறிப்பு இலக்கம் 76 மற்றும் 77 இலுள்ள மீதிகள் பரீட்சை மீதியில் தவிர்க்கப்பட்டுள்ளத னாலாகும். அதனை சரி செய்து இதனுடன் அனுப்பப்படும் என தயவாகத் தெரிவிக்கின்றேன். | தவிர்க்கப்படாது நாட்குறிப்புக்களை பரீட்சை மீதியில் குறிப்பிடுதல் வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக பிரேதச சபையின் மீண்டுவரும் வருமானங்களை மிகைத்த செலவுகள் ரூபா 219879 ஆக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 1,759,111 ஆகும். இந்த முரண்களுக்கு பிரதான காரணமாக இருந்ததானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மீதவரி மற்றும் வரி வருமானம், வாடகை வருமானம் உத்தரவு பத்திரக் கட்டணம் வருமானம், ஏனைய வருமானம் என்பன ரூபா 1,407,905 ஆல் வீழ்ச்சியடைந்தமையாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைக்குச் சொந்தமான 129 குழாய்க் கிணறுகளில் 101 குழாய்க் கிணறுகள் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்காததுடன் அக்குழாய்க் கிணறுகளை பிரதேசத்திலுள்ள மக்களின் வேண்டுகோளின் பிரகாரம் வருடாந்தம் ரூபா 5,000 பணத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு பொதுச் சபை தீர்மானம் எடுத்திருந்தும் கணக்காய்வுத் திகதியான 2021 மார்ச் 01 ஆந் திகதி வரை 03 கிணறுகள் மாத்திரம் அவ்வாறு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திலுள்ள மக்கள் இது தொடர்பாக தெரியப்படுத்தப் பட்டுள்ளதுடன் ஏனைய 98 குழாய்க் கிணறுகளும் பொதுமக்களின் வேண்டுதலின் பிரகாரம் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். | பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தி குழாய்க் கிணறுகளை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | "திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்திட்டத்தை நவீனமயப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டம்- 2019" செயற்திட்டத்தின் கீழ் தம்மன்னாவ பச்சில்லேவ காணியில் யானை வேலி, காவல் நிலையம், குழாய்க் கிணறு, குப்பைகளைப் பிரித்து களஞ்சியப் படுத்துகின்ற நிலையம் என்பவற்றை நிர்மாணிப் பதற்காக ரூபா 1,979,353 செலவு செய்யப்பட்டிருந்தும் முறைப்படியாக உரிய இடத்திற்கு குப்பைகளை அகற்றுதல் இடம்பெற்றிருக் காததுடன் 2019 ஆம் ஆண்டின் போது சபைக்கு ஒப்படைக்கப்பட்ட காணியில் குப்பைகளை கொட்டுதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | முடியுமானளவு விரைவாக நிதி ஏற்பாட்டினை வழங்கி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | தேவையான நிதி ஏற்பாட்டினை வழங்கி முறைப்படியாக குப்பைகளை கொட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |